www.Padasalai.Net www.CBSEtips.in

A

# kanchipuram Dt

## அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2022

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண்:

நேரம்: 3.00 மணி **பொருளியல்** மதிப்பெண்கள்: 90

பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 20×1=20

1. பொருளாதாரத்தில் நாம் படிக்கும் அடிப்படைப் பிரச்சனை
   அ) எண்ணற்ற விருப்பங்கள் ஆ) அளவற்ற வளங்கள் இ) பற்றாக்குறை
   ஈ) நம் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான உத்தி
2. பயன்பாடு என்பது
   அ) தேவையும் அளிப்பும் சமமாக இருக்கும் சமநிலைப்புள்ளி
   ஆ) மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் சக்தி
   இ) பண்டங்களின் மொத்த மதிப்பு ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான விருப்பம்
3. இறுதிநிலைப் பயன்பாடு பூஜ்யமாக இருக்கும்போது மொத்தப் பயன்பாடு ............
   அ) குறைவாக ஆ) உச்சமாக இ) பூஜ்ஜியமாக ஈ) எதிர்மறையாக
4. ஒரு நிறுவனத்தின் உள்ளீடு வெளியீடுகளுக்கு இடையே உள்ள இயல்பான தொடர்பைத் தருவது எது?
   அ) நுகர்வுச் சார்பு ஆ) உற்பத்திச் சார்பு இ) சேமிப்புச் சார்பு ஈ) முதலீட்டு சார்பு
5. சராசரி மாறும் செலவுக்கான வாய்ப்பாடு
   அ) TC /Q ஆ) TVC /Q இ) TFC /Q ஈ) TAC /Q
6. இறுதிநிலை வருவாய் என்பது ஏற்கனவே உள்ள ............ உடன் கூடுதலாக பெறுவது.
   அ) மொத்த விற்பனை ஆ) மொத்த வருவாய் இ) மொத்த உற்பத்தி ஈ) மொத்தச் செலவு
7. எந்தவகை அங்காடியில் போட்டியே இராது?
   அ) நிறைவுப்போட்டி ஆ) முற்றுரிமை இ) முற்றுரிமை போட்டி ஈ) சில்லோர் முற்றுரிமை
8. பகிர்வுக்கோட்பாடு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
   அ) உற்பத்தி விலைக்கோட்பாடு ஆ) காரணி விலைக் கோட்பாடு
   இ) கூலிக் கோட்பாடு ஈ) வட்டிக்கோட்பாடு
9. போலிவாரம் இதனால் தோன்றுகிறது.
   அ) மனிதன் உருவாக்கிய உபகரணங்கள் ஆ) வீட்டில் தயார் செய்தவை
   இ) இறக்குமதிப் பொருட்கள் ஈ) எதுவுமில்லை
10. மக்கள் தொகையில் 1961 ஆம் வருடம் ............ எனப்படுகிறது.
    அ) சிறிய பிரிவினை வருடம் ஆ) மக்கள் தொகை வெடிப்பு வருடம்
    இ) நகர மயமாதல் வருடம் ஈ) பெரும் பிரிவினை வருடம்
11. V.K.R.V இராவ் இவரின் மாணவராக இருந்தார்.
    அ) J.M. கீன்ஸ் ஆ) காலின் கிளார்க் இ) ஆடம் ஸ்மித் ஈ) ஆல்பிரட் மார்ஷல்
12. இந்தியாவின் பசுமைப்புரட்சியின் தந்தை என்றழைக்கப்படுபவர்
    அ) M.S. சுவாமிநாதன் ஆ) காந்தி இ) விஸ்வேஸ்வரையா ஈ) N.R. விஸ்வநாதன்
13. வாழ்க்கை தரக் குறியீட்டெண்ணை உருவாக்கியவர்
    அ) திட்டக்குழு ஆ) நேரு இ) D. மோரிஸ் ஈ) பிஸ்வாஜித்
14. பண்டங்கள் மற்றும் பணிகள் வரி என்பது
    அ) ஒரு முனை வரி ஆ) அடுக்கு விளைவுகளைக் கொண்டது
    இ) மதிப்பு கூட்டப்பட்ட வரி போன்றது ஈ) பலமுனை வரி மற்றும் அடுக்கு விளைவுகளற்றது
15. குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் வேலைவாய்ப்புப் பெறுவதை எப்படிக் கருதுவது?
    அ) திறந்த வேலைவாய்ப்பு ஆ) மறைமுக வேலைவாய்ப்பு
    இ) பருவகால வேலைவாய்ப்பு ஈ) ஊரக வேலைவாய்ப்பு
16. எந்த வருடம் ஊரக வட்டார வங்கி பயன்பாட்டிற்கு வந்தது?
    அ) 1965 ஆ) 1970 இ) 1975 ஈ) 1980
17. எழுத்தறிவு வீதத்தில் தமிழ்நாட்டின் தரம்
    அ) இரண்டு ஆ) நான்கு இ) ஆறு ஈ) எட்டு

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



18. தமிழ்நாட்டு உள்நாட்டு உற்பத்தியில் அதிக பங்கு வகிப்பது?
அ) வேளாண்மை ஆ) தொழில்துறை இ) சுரங்கம் ஈ) பணிகள்

19. $x + y = 5$, $x - y = 3$ என்றால் x ன் மதிப்பு ............. ஆகும்.
அ) 4 ஆ) 3 இ) 16 ஈ) 8

20. Ctrl + M என்ற ஆணை .......... பயன்படுத்தப்படுகின்றது.
அ) சேமிக்க ஆ) நகலெடுக்க இ) புதிய நழுமத்தைப் பெற ஈ) நழுமத்தை நீக்க

பகுதி -ஆ

**II. ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி.**
**(வினா எண் 30க்கு கட்டாயமாக விடையளிக்கவும்)** 7×2=14

21. பயன்பாட்டின் ஏதேனும் இரண்டு வகைகளைக் கூறுக.
22. விருப்பங்களை வகைப்படுத்துக.
23. உற்பத்திக் காரணிகளை வகைப்படுத்துக.
24. கீழ்கண்ட நிறுவனத்தின் தேவைக்கோடு வரைக. (அ) நிறைவுப் போட்டி (ஆ) முற்றுரிமை
25. இலாபம் என்றால் என்ன?
26. தேசியமயமாதல் - வரையறு.
27. சிறப்புப் பொருளாதார மண்டலம் என்பதன் பொருள் என்ன?
28. தமிழ்நாட்டின் அணுமின்நிலையங்கள் எவை?
29. MS word ன் முக்கிய அம்சங்கள் யாவை?
30. ஊரக மின்மயமாக்கல் - வரையறு.

பகுதி -இ

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி.**
**வினா எண் 40க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 7×3=21

31. நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?
32. சமநோக்கு வளைகோடுகளின் பண்புகள் யாவை?
33. நிலத்தின் சிறப்பியல்புகள் யாவை?
34. AC மற்றும் MC எடுத்துக்காட்டுகளுடன் வரையறு.
35. நிறுவனம் மற்றும் தொழிற்சாலைக்கு இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
36. பணத்தேவைக்கான நோக்கங்கள் யாவை?
37. நலப்பொருளாதாரம் பற்றி அமர்த்தியா சென்னின் கருத்துக்களை எழுதுக.
38. ஊரக வறுமையை நீக்குவதற்கான வழிமுறைகளை கூறுக.
39. தமிழ்நாட்டிலுள்ள புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் யாவை?
40. பனிரெண்டாம் ஐந்தாண்டுத்திட்டம் பற்றி குறிப்பு வரைக.

பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** 7×5=35

41. அ) பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.
**(அல்லது)**
ஆ) உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டைக் கொண்டு பொருளாதாரத்தின் அடிப்படை பிரச்சனைகளை விவரி.

42. அ) தேவை விதியை வரைபடத்துடன் விவரி. **(அல்லது)**
ஆ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரி.

43. அ) மாறும் விகித விளைவு விதியை வரைபடத்துடன் விளக்குக. **(அல்லது)**
ஆ) பல்வேறுபட்ட விலை நிலைகளில் AR மற்றும் MR கோடுகளுக்கு இடையேயான தொடர்பை விளக்குக.

44. அ) நிறைவுப்போட்டியில் எவ்வாறு விலை மற்றும் உற்பத்தி அளவு தீர்மானிக்கப்படுகிறது?
**(அல்லது)**
ஆ) ரிக்கார்டோவின் வாரக்கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரி.

45. அ) காந்தியப் பொருளாதாரக் கருத்துகளை சுருக்கமாக எழுதுக. **(அல்லது)**
ஆ) பொருளாதார முன்னேற்றத்தில் சிறுதொழில் நிறுவனங்களின் பங்கினை விவரி.

46. அ) 2015-2020 ம் ஆண்டிற்கான ஏற்றுமதி – இறக்குமதி கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக.
**(அல்லது)**
ஆ) ஊரக பொருளாதாரப் பிரச்சனைகளை ஆராய்க.

47. அ) தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக. **(அல்லது)**
ஆ) $TC = 25q^3 - 13q^2 + 50q + 12$ என்றால் இறுதிநிலை செலவுச்சார்பு, சராசரி செலவுச்சார்பு ஆகியவற்றை காண்.

------------

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com